(இ) தமிழ் நாடு தாராள ஓய்வூதியத் திட்டம் ஊராட்சிப் பணியாளர்களுக்கு நீட்டிக்கப்படவில்லை. இருப்பினும், பணிக்கொடை, வருங்காலச் சேமிப்பு நிதி நலன்களைப் பெற அவர்களுக்குத் தகுதியுண்டு.

(உ) ஊராட்சிகளின் எழுத்தர்களும், தலைமை எழுத்தர்களும் பேரூராட்சியின் தரம் 1 அதிகாரியாகவும் (ஊராட்சி) வளர்ச்சி அதிகாரியாகவும் தெரிந்தெடுக்கப்படலாம். உரிய தகுதி பெற்றிருப்பின் உரிய காலம் கடந்த பின் தண்டலர்களும் ஊராட்சிகளில் எழுத்தர்களாகப் பதவி உயர்வு பெறலாம். உள்ளாட்சி மன்றங்களில் உள்ள பொதுச் சுகாதார மேஸ்திரிகளுக்கு மேலும் பதவி உயர்வு பெற வாய்ப்பில்லை.

Pre-fabricated houses

***530 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state. —**

(*a*) whether the Tamil Nadu Housing Board has given up the idea of setting up a pre-fabricated housing plant near Madras a nd

(*b*) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) அமைப்பு வீடுகளை (**Pre-fabricated houes**) அமைப்பதற்குத் தேவைப்படும் தொழிற்சாலையை நிறுவ தோராயமாக ரூ. 4 கோடி செலவு ஆகும். தற்பொழுது ஒதுக்கப்பட்டுள்ள தொகையிலிருந்து இப்பெரும் தொகையை முதலீடு செய்ய இயலாது.

திரு. கே. வினயகம் : சார், இந்த பிரீ-ஃ பாபிரிகேட்டட் ஹவுஸிங் பிளாண்ட் வைத்தால் அந்த யூனிட்டிடமிருந்து, செலவுக் குறைவாக பல பொருள்களைப் பெறமுடியும், வீடுகள் உண்டாக்கமுடியும் என்ற ஒரு கருத்து இருந்தது. அவர்கள் வெளியே அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் போய், இன்னும் விலை குறைவாக, கடைசியிலே வீடுகள் மதிப்பிடப்படும் என்ற கருத்து நமக்கு இலாபம் என்ற காரணத்தினுல், அதை ஏன் இப்பொழுது கை விட்டுவிட்டார்கள் ? ஹவுஸிங் போர்ட் வீட்டுக்குரிய பொருள்களையும் உண்டாக்கமுடியும், அதன் மூலமாக உறுப்புகள் மற்ற தேவையான பொருள்களையும் குறைந்த விலையில் வினியோகம் செய்யமுடியும், அதனுலே இலாபம் அடைய முடியும். அதை ஏன் கைவிட்டார்கள் என்று சொல்லமுடியுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இப்பொழுது இந்த பிரீஃபாபிரிகேட்டட் ஹவுஸிங் பிளாண்ட் கட்டுவதற்கு, நிறுவுவதற்கு மட்டும் தோராயமாக ரூ. 4 கோடி தேவைப்படுகிறது. அதல்லாமல் அந்தப் பொருள்களை வாங்கி வியாபாரம் செய்வதற்கு மேற்கொண்டு பல கோடி ரூபாய் தேவைப்படும். அது மட்டுமல்லாமல், இப்பொழுது செங்கற்சூளை ஒன்று 90 இலட்சம் ரூபாய் செலவிலே கட்ட இருக்கிறோம். புழை கற்கள் தொழிற்சாலை ஒன்று சுமார் $2\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவிலே கட்ட இருக்கிறோம். அதற்கும் மேற்கொண்டு பல கோடி ரூபாய்கள் தேவைப்படுகின்றன. இந்த இரண்டு தொழிற்சாலைகளிலும் உற்பத்தி ஆகின்ற பொருள்களை வாங்கி உபயோகிப்பதற்கு நம்மிடம் போதுமான தேவைகள் இல்லை. அதற்கே, பி. டபிள்யூ. டிபார்ட்மெண்ட், சென்ட்ரல் பி. டபிள்யூ.டி., ரெயில்வே இவர்களெல்லாம் ஒத்துழைத்தால் தான் அந்த இரண்டு தொழிற்சாலைகளும் முன்னுக்கு வரமுடியும். ஆகவே பணமும் தேவைப்படுகிறது. நாட்டிலே தேவையும் குறைவாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இப்பொழுது தொழிற்சாலைகளில் வேலை செய்து வருகின்ற வேலை ஆட்களுக்கு வேலை இழப்பு ஏற்படுகிற நிலைமையும் இருக்கிற காரணத்தால், அதை தற்போது செய்வதற்கில்லை.